# அறிவித்தல் இல. R/2025/12

## வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் விளையாட்டுத் துறைசார் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப பிரிவு 02 இன் விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களின் CP/DEC/25ம் இலக்க 2025.07.16ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.07.07ம் திகதிய அமைச்சரவைக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் NP/03/02/GA/10/SO/CA இலக்க 2025.07.25ம் திகதிய கோரிக்கைக்கு அமைய, வடக்கு மாகாண விளையாட்டு திணைக்கள விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு காணப்படும் **11** வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது, வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2025 நவம்பர் மாதமளவில்** யாழ்ப்பாண மாவட்டத்தில் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2025.10.03** ஆகும்.

### 01. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

01.1. 2016.09.26 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண விளையாட்டு திணைக்கள விளையாட்டுதுறை சார் உத்தியோகத்தர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பு, அவற்றில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களிற்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30ம் இலக்க, 2013.07.03ம்** திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை மற்றும் இப்பதவியுடன் தொடர்புபட்டு, காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் விதிகள், கட்டளைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த விளையாட்டு திணைக்களத்தின் விளையாட்டுத் துறைசார் உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப பிரிவு 02 இன் விளையாட்டு உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர்.

01.2. இதன் பொருட்டான எழுத்துப்பரீட்சை, தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சை என்பவற்றில் தகைமை பெற்று கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்த புள்ளிகளின் ஒழுங்குவரிசைப்படி, குறித்த பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மாகாண விளையாட்டு உத்தியோகத்தர் சேவை பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று (03)** வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

01.3. இப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

01.4. இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

01.5. ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது **ஐந்து (05)** வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

01.6. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03)** வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

01.7. திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை **11** ஆகும். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 02. சம்பள அளவுத்திட்டம் :-

2025.03.25ம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MT 2 - 2025**க்கு ஏற்ப விளையாட்டு உத்தியோகத்தர் சேவை தரம் - **III** இற்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டமானது ரூபா **50,630 - 10 x 630 - 11 x 670 - 10 x 1,010 - 10 x 1,190 - 86,300/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

## 03. பொதுவான தகைமைகள் :-

03.1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

03.2. விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

*கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் பிரித்தெடுப்பிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்

03.3. விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்

03.4. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

03.5. விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் **இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

03.6. விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று **18 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 04. கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :-

**(04.1) கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:-**

**பின்வரும் (அ) அல்லது (ஆ) ஆகிய இரு வகுதிகளில் யாதாயினும் ஒன்றை பூர்த்தி செய்தல் வேண்டும்.**

**(அ)**

01. கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்) மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் **ஒரே அமர்வில்** ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

**அத்துடன்**

02. கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சையில் **ஒரே அமர்வில் மூன்று (03) பிரதான பாடங்களிலும்** சித்தியடைந்திருத்தல். (பொதுவான பாடப்பரீட்சைகள் தவிர)

**அத்துடன்**

03. வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மாகாண விளையாட்டு விழாவில் தனிநபர் போட்டி அல்லது குழுநிலைப்போட்டியில் 1ம் இடம் அல்லது 2ம் இடத்திற்கான சான்றிதழை பெற்றிருத்தல். அல்லது தேசிய விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டு விழாவில் தனிநபர் போட்டி அல்லது குழுநிலைப் போட்டியில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 1ம் இடம் அல்லது 2ம் இடம் அல்லது 3ம் இடத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல்.

**(ஆ)**

**அல்லது**

01. கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்) மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் **ஒரே அமர்வில்** ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

**அத்துடன்**

02. தெற்காசிய போட்டி, ஆசியபோட்டி, பொதுநலவாய சபைப் போட்டி, ஒலிம்பிக்போட்டி அல்லது உலகக்கிண்ண போட்டிக்காக இலங்கையைப் பிரநிதித்துவப்படுத்தி 1ம் அல்லது 2ம் அல்லது 03ம் இடத்தினை பெற்றிருத்தல்.

## 05. ஆட்சேர்ப்பு முறை :-

05.1 எழுத்துப்பரீட்சை, தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை என்பவற்றின் மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், சேவைப்பிரமாணக்குறிப்பு, தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

05.2 இவ் ஆட்சேர்ப்புக்காக குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைதலுக்கான தகைமை புள்ளியாக வினாப்பத்திரத்தில் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் மட்டும் தொழில்சார் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

05.3 05.1 மற்றும் 05.2 ஆகியவற்றில் குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

05.4 கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்த புள்ளிகளின் ஒழுங்குவரிசைப்படி காணப்படும் வெற்றிடங்களிற்கமைய மாகாண விளையாட்டு உத்தியோகத்தர் சேவை பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்

## 06. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா. 500/- ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 07. விண்ணப்பிக்கும் முறை :-

07.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்குமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

07.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/204"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

07.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை

ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

07.4 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

07.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: **021 221 9939** / தொலைநகல் இல: **021 221 9940** / மின்னஞ்சல்: **exampscnp@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

## 08. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

a. பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.

(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

b. மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சைமண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

## 09. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் எழுத்துப் பரீட்சை ,தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முக தேர்வின் முன்னரோ குறித்த தேர்வுகள் நடைபெறும் போதோ அல்லது பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 10. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியபிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா.854,880.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 11. பரீட்சைத் திட்டம் :-

*01. எழுத்துப் பரீட்சை*

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான வினாத்தாளை கொண்டிருக்கும். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழி மூலத்தை தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்திற்கு அந்த மொழி மூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| இல | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | இப் பரீட்சை வினாத்தாளானது பரீட்சார்த்தியின் விளையாட்டு தொடர்பான அறிவு, அடிப்படை விதிகள், விளையாட்டு தொடர்பான தொழில்நுட்ப விடயங்கள், உடற்கதைமை / போசாக்கு, விளையாட்டுடன் தொடர்பான உடற்பகுதிகள் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகள், முதலுதவி, தொடர்பாடல் திறன், விளையாட்டு அபிவிருத்திக்கான உபாயங்கள், மாகாண மட்டத்தில் பிரபலமான விளையாட்டு வகைகள் தொடர்பில் பரிசீலிப்பதாக அமையும் **(50 சுருக்கமான விடையளிக்கும் வினாக்கள்)** | $01^1/_2$ மணித்தியாலங்கள் | 100 |

குறிப்பு :-

தொழில் சார் பரீட்சை (தகைமை தேர்வு) தகைமை பெறுவதற்கு எழுத்துப் பரீட்சையில் குறைந்தபட்சம் **40%** புள்ளிகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

02. தொழில்சார் பரீட்சை

உடற்தகைமையினை மதிப்பீடு செய்வதற்கான தொழில்சார் பரீட்சை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நடாத்தப்படும் குறித்த தொழில்சாார் பரீட்சையில் (பிரயோக பரிசோதனையில்) சித்தியடைய வேண்டும். அவ்வாறான உடற்தகைமை பரிசோதனையானது கீழ் குறிப்பிடப்படும் வகையிலான விடயங்களை உள்ளடக்கியதாக அமையும்.

| *இல* | *விடயம்* |
|---|---|
| 01 | மீள் செயற்பாட்டு வேகம் |
| 02 | நெகிழ்வுத்தன்மை |
| 03 | வயிற்றின் சக்தி |
| 04 | இருகரங்களினதும் சக்தி |
| 05 | உடற்பலம் |
| 06 | வேகம் |
| 07 | தாங்கிக் கொள்ள கூடிய சக்தி |

### 03. கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சை

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். ***(மொத்தம் 100 புள்ளிகள்)***

| இல | புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள் | | | | புள்ளிகள் வழங்கப்படும் விதம் | உப பிரிவுகளின் உயர்ந்த புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | 01. மேலதிக கல்வித் தகைமைகள்<br>02. | | | | | | |
| 1.1 | இலங்கை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் விளையாட்டு துறையுடன் தொடர்புடைய பட்டப்படிப்பு | | | | 10 | 10 | 10 புள்ளிகள் |
| 1.2 | விளையாட்டு துறை சார்ந்த வேறு கற்கைகள் | | | | | | |
| | 01 வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட கற்கைக் காலம் | | | | 05 | 05 | |
| | 06 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட கற்கைக் காலம் | | | | 03 | | |
| | 03. மேலதிக தொழில்சார் தகைமைகள், அனுபவம், திறன்கள் | | | | | | |
| 2.1 | பயிற்றுவித்தல் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் | | | | | 03 | 10 புள்ளிகள் |
| 2.2 | மத்தியஸ்தர் / நடுவர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற விளையாட்டு போட்டி கடமைகளுக்கான அனுமதி பத்திரம் (Licence) பெற்றிருத்தல் - உரிய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து | | | | | 03 | |
| 2.3 | சர்வதேச , தேசிய மாகாண மட்ட திறந்த போட்டிகளில் அல்லது சர்வதேச தேசிய விளையாட்டு சங்கங்களால் நடாத்தப்படும் சிரேஸ்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் மத்தியஸ்தர் / நடுவர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் கடமைகளை ஆற்றியமை | | | | | 08 | |
| | 01.சர்வதேச மட்ட போட்டிகள ( திறந்த / சர்வதேச சங்கங்கள்) | | | | போட்டியொன்றுக்கு 04 புளிகள் | | |
| | 02.தேசிய மட்ட போட்டிகள் (திறந்த) | | | | போட்டியொன்றுக்கு 03 புளிகள் | | |
| | 03.மாகாண மட்ட போட்டிகள் (திறந்த) | | | | போட்டியொன்றுக்கு 03 புளிகள் | | |
| 03 | விளையாட்டு திறமைகள் | | | | | | |
| 3.1 | சர்வதேச மட்ட போட்டியில் (பிராந்திய / பொது நலவாய / உலக கிண்ணம் / ஒலிம்பிக்) வெற்றி பெற்றிருப்பின் கீழ் குறிப்பிடும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். | | | | | 75 | 75 புள்ளிகள் |
| | | **புள்ளிகள் வழங்கப்படும் விதம்** | | | | | |
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | | | |
| | 1.தனி விளையாட்டுக்கள் (Individual / Single) | 75 | 70 | 65 | | | |
| | 2.இணை விளையாட்டுக்கள் (Double/Double Mix) | 65 | 60 | 55 | | | |
| | 3. அணி விளையாட்டுக்கள் (Team) | 55 | 50 | 45 | | | |
| 3.2 | விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டு விழா போட்டிகளில் வெற்றி பெற்றிருப்பின் | | | | | 30 | |
| | | **புள்ளிகள் வழங்கப்படும் விதம்** | | | | | |
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | | | |
| | 1.தனி நபர் போட்டி | 35 | 30 | 25 | | | |
| | 2. இரட்டையர் போட்டி | 30 | 25 | 20 | | | |
| | 3. குழு போட்டி | 25 | 20 | 15 | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3.3 | மாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடாத்தப்படும் மாகாண மட்ட திறந்த போட்டி ஒன்றில் வெற்றி பெற்றிருப்பின் | | | | 20 | |
| | | புள்ளிகள் வழங்கப்படும் விதம் | | | | |
| | | தங்கம் | தங்கம் | தங்கம் | | |
| | 1.தனி விளையாட்டுக்கள் (Individual / Single) | 15 | 12.5 | 10 | | |
| | 2.இணை விளையாட்டுக்கள் (Double / Double Mix) | 12.5 | 10 | 7.5 | | |
| | 3. அணி விளையாட்டுக்கள் ( Team) | 7.5 | 05 | 2.5 | | |
| 3.4 | தேசிய / மாகாண மட்டத்தில் ( திறந்த) வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களின் ( கீழ் வரும் வகுதிகளில்) பிரதேச மட்ட / தனிப்பட்ட பயிற்றுவிப்பாளராக இருத்தல் | | | | | |
| | | | ஒரு வீரரின் பொருட்டு வழங்கப்படும் புள்ளி | ஒவ்வொரு வகுதியிலும் கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்கூடிய வீரர்களின் எண்ணிக்கை | | |
| | 1.தனி விளையாட்டுக்கள் (Individual / Single) | | 02 | 05 | 10 | |
| | 2.இணை விளையாட்டுக்கள் (Double / Double Mix) | | 01 | 10 | | |
| | 3. அணி விளையாட்டுக்கள் ( Team) | | 0.5 | 20 | | |
| *04* | **நேர்முக பரீட்சையில் காண்பிக்கப்பட்ட் திறன்கள்** | | | | | |
| | நேர்முக பரீட்சையில் காண்பிக்கப்பட்ட ஆளுமை , தொடர்பாடல் திறன்கள், தலைமைத்துவ பண்புகள் | | | | 05 | 05 புள்ளிகள் |
| | மொத்தம் | | | | | 100 புள்ளிகள் |

குறிப்பு:-

*01.* மேலே *3.1, 3.2* மற்றும் *3.3* **ஏதேனுமொரு போட்டியின் உயர் அடைவு மட்டமொன்றுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்**

## 12. பரீட்சைப் பெறுபேறுகள் :-

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழையும் www.np.gov.lk ⟶ **Exams & Recruitments** ⟶ **Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-**

(i) இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாக, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**ஆழ்வாப்பிள்ளை சிறி,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
***2025.09.15***

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்